# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 8 | குடியியற்கல்வி | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**பகுதி - I**

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. "ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு" என்ற மகுடவாசகம் குறிக்கும் பொதுச்சேவையாகக் கருதப்படுவது
    1) போக்குவரத்து 2) கூட்டுறவு 3) பொலிஸ் 4) மின்சாரம்

02. அநுராதபுர யுகத்தில் "10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர்" என்ற வகையில் நியமித்த மன்னன்
    1) புத்ததாச மன்னன் 2) தாதுசேனன் 3) தேவநம்பியதீசன் 4) வசபன்

03. நற்பிரஜை ஒருவரிடம் காணப்படும் பண்பாக அமைவது
    1) பொறாமை 2) சுயநலம் 3) பெரியோரை மதித்தல் 4) போதைப்பொருள் பாவனை

04. பௌத்தமதத்தவரால் கொண்டாடப்படும் விழா
    1) தைப்பொங்கல் 2) வெசாக் 3) கிறிஸ்மஸ் 4) நோன்புப் பெருநாள்

05. பொலிஸ் அவசர சேவைகளுக்காக மக்கள் முறைப்பாடு செய்யும் தொலைபேசி எண்
    1) 118 2) 119 3) 1919 4) 110

06. ஐக்கிய நாடுகள் சாசனம், சிறுவர்கள் யாரென்று வரையறை செய்கின்றது
    1) 14 வயதிற்குக் குறைந்தோர் 2) 16 வயதுடையோர்
    3) 18 வயதிற்குக் குறைந்தோர் 4) 20 வயதுடையோர்

07. பின்வருவனவற்றுள் தொற்றாநோயாகக் காணப்படுவது
    1) எலிக்காய்ச்சல் 2) இருதயநோய் 3) காசநோய் 4) வைரஸ் காய்ச்சல்

08. பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பொதுச்சேவையாகக் கருதப்படுவது
    1) சுகாதாரம் 2) போக்குவரத்து 3) நீர் விநியோகம் 4) மின்சாரம்

09. பல குடும்ப அலகுகள் ஒன்றிணைந்து உருவாகுவது
    1) கூட்டுக் குடும்பம் 2) கருக்குடும்பம் 3) சங்கம் 4) சமூகம்

10. குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்க நிறுவப்பட்ட சர்வதேச அமைப்பு
    1) யுனிசெப் 2) யுனேஸ்கோ 3) செஞ்சிலுவைச் சங்கம் 4) உலக சுகாதார நிறுவனம்

11. எமது நாட்டின் தேசிய விளையாட்டு
    1) உதைபந்து 2) கபடி 3) கரப்பந்து 4) துடுப்பாட்டம்

12. இலவசக் கல்வியின் தந்தை
    1) சேர்.பொன்.இராமநாதன் 2) C.W.W.கன்னங்கரா
    3) சேனக பிபிலே 4) அகில விராஜ் காரியவசம்

13. பிள்ளைகள் அடிப்படையான ஜனநாயகப் பண்புகளையும் அனுபவங்களையும் ஆரம்பத்தில் பெறுவது
    1) சகபாடிக்குழு 2) பாடசாலை 3) கல்வி நிறுவனம் 4) குடும்பம்

14. சிரித்தல், கைதட்டுதல் எந்த மனவெழுச்சியின் வெளிப்பாடாகும்
    1) கோபம் 2) பயம் 3) மகிழ்ச்சி 4) துக்கம்

15. கோட்டக்கல்வி அலுவலகத்தின் பிரதான செயற்பாட்டாளர்
   1) உதவிக் கல்விப் பணிப்பாளர்
   2) கோட்டக்கல்விப் பணிப்பாளர்
   3) பிரதிக்கல்விப் பணிப்பாளர்
   4) சமூக சேவை உத்தியோகத்தர்

16. பின்வருவனவற்றுள் அச்சு ஊடகமாக அமைவது
   1) இணையம்
   2) தொலைக்காட்சி
   3) பத்திரிகை
   4) வானொலி

17. இலங்கையில் பெரும்பான்மையான மக்களால் பயன்படுத்தப்படும் போக்குவரத்து ஊடகம்
   1) விமானப் போக்குவரத்து
   2) கப்பல் போக்குவரத்து
   3) பொதுப் போக்குவரத்து
   4) ரயில் போக்குவரத்து

18. முன்பள்ளிகளை நடாத்தும் அமைப்பாகக் கருதப்படுவது
   1) பாடசாலை
   2) உள்ளூராட்சி மன்றங்கள்
   3) தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
   4) பல்கலைக்கழகம்

19. வாக்களிக்கும் உரிமை என்பது
   1) அரசியல் உரிமை
   2) சிவில் உரிமை
   3) கலாசார உரிமை
   4) பொருளாதார உரிமை

20. இலங்கையின் தேசியகீதத்தை இயற்றியவர்
   1) ஆறுமுக நாவலர்
   2) ஆனந்த சமரக்கோன்
   3) அழவள்ளியப்பா
   4) சேர்.பொன்.இராமநாதன்

(20 x 2 = 40 புள்ளிகள்)

**பகுதி - II**

❖ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01. 1) பொதுச்சேவை என்றால் என்ன?
   2) நீங்கள் பயன்படுத்தும் பொதுச்சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   3) பொதுச்சேவையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

02. 1) சுகாதார சேவையின் செயற்பாடுகள் 04 தருக.
   2) கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் 04 தருக.
   3) வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் 04 பேரைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

03. 1) போக்குவரத்துச் சேவையை வழங்கும் நான்கு நிறுவனங்களைத் தருக.
   2) உமது பிரதேசத்தின் பொதுப்போக்குவரத்து சேவையில் காணப்படும் குறைபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
   3) புகையிரத நிலையமொன்றின் பணியாற்றும் அலுவலர்களைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

04. 1) தொடர்பாடல் ஊடகங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   2) பொலிஸ் துறையின் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
   3) இலங்கையில் செயற்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

05. 1) சிறுவர் உரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   2) குடும்பத்தில் காணப்படும் ஜனநாயகப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
   3) பாடசாலையில் நடைபெறும் இணைபாட விதானச் செயற்பாடுகள் நான்கு தருக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

06. 1) தற்போது இலங்கையில் அதிகரித்து வரும் நோய்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   2) சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு நிறுவனங்களைக் குறிப்பிடுக.
   3) எமது நாட்டில் நடைமுறையில் உள்ள நான்கு வைத்தியமுறைகளைக் குறிப்பிடுக.

(3 x 4 = 12 புள்ளிகள்)